# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1994 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, எல்பிட்டிய விகாரமகாதேவி பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபா (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1994, ஜூன் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

***அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.***

---

*1994 ஜூன் மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் **வர்த்தமானப் பத்திரிகையின்** பகுதி II இற்குக் **குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.***

***இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற்** பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் .75 தபாற் செலவு : ரூபா 1.00

1994 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, எல்பிட்டிய விகாரமகாதேவி பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபா (கூட்டிணைத்தல்) சட்டம்

[1994, ஜூன் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ—ஒ. 34/92

**எல்பிட்டிய விகாரமகாதேவி பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபாவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.**

"எல்பிட்டிய விகாரமகாதேவி பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபா" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சபா ஒன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சபாவோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென எல்பிட்டிய விகாரமகாதேவி பிரிவேனவில் உருவாக்கப்பட்டிருப்பதாதலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட சபாவானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும், இதுவரை சொல்லப்பட்ட நிறுவனத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும்; அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1994 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, எல்பிட்டிய விகாரமகாதேவி பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபா (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "சபா" எனக் குறிப்பீடு செய்யப்படும்) எல்பிட்டிய விகாரமகாதேவி பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபாவின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அத்தகையோரான அத்தனை ஆட்களும், இத்தால் அமைக்கப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதற்குப் பின்னர் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் "எல்பிட்டிய விகாரமகாதேவி பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபா" என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறா வழியுரிமை கொண்ட (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டிணைக்கப்பட்ட குழுவாதலும் வேண்டும்; அத்துடன் அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் ; அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும். எல்பிட்டிய விகார மகாதேவி பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபாவைக் கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :— கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) எல்பிட்டிய விகாரமகாதேவி பிரிவேனவின் கட்டடங்களைப் பேணுதலும் அவசியமானவாறும் அவசியமானபோதும் ஏதேனும் புதிய கட்டடங்களை நிர்மாணித்தலும் பேணுதலும்;

(ஆ) பௌத்தர்களிடையே மத உணர்ச்சியை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளை நடாத்துதல்;

(இ) எல்பிட்டிய விகாரமகாதேவி பிரிவேனவுடன் இணைந்த வேறு விகாரைகளையும் பிரிவேனுக்களையும் பேணுதல்;

(ஈ) ஆன்மீக அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காகவும் பௌத்த கொள்கைகளைப் பரப்பும் நோக்கத்திற்காகவும் பிரிவேனுக்கள் உட்பட கல்வி நிறுவனங்களைத் தாபித்தலும் பேணுதலும்;

(உ) தம்ம அறிவைப் புகட்டுதலும் பௌத்தர்களினால் தான, சில, பாவன ஆகியன அனுட்டிக்கப்படுவதனை மேம்படுத்தல்;

(ஊ) வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு அல்லது சுயதொழிலில் ஈடுபடுவதற்கு இளைஞர்களைப் பயிற்றுவித்தல் ;

(எ) ஞானம் மற்றும் கருணை அடிப்படையிலான பௌத்த நோக்கில் சித்த சுகாதாரம், ஆளுமை அபிவிருத்தி, தேசிய ஒருமைப்பாடு, உலக சமாதானம் தொடர்பில் இளைஞர்களுக்கு கருத்தரங்குகளையும், வேலைக்களங்களையும், மாநாடுகளையும் திசைப்படுத்தல் பயிற்சி நெறிகளையும் நடாத்துதல்;

(ஏ) பௌத்தம் பற்றிய புத்தகங்கள், ஆராய்ச்சி அறிக்கைகள் சஞ்சிகைகள், வேறு ஆவணங்கள், கேட்டல், காணல், உபகரணங்கள், படங்கள், நாடாக்கள் என்பவற்றைக் கொண்டுள்ள நூலகமொன்றை அமைத்தல்;

(ஐ) நலிவுற்றோருக்கு உதவுதல்;

(ஒ) பிள்ளைகளுக்கும் இளைஞர்களுக்கும் வளர்ந்தோருக்கும் ஒழுக்க நெறி வழிகாட்டுகையை வழங்குதலும் மாணவர்களுக்கு அவர்களின் தேவைகளைச் சமாளிப்பதற்காக உதவி வழங்கலும்;

(ஓ) பொருத்தமான தகைமையுடையவர்களும் சமயப்பற்றுக் கொண்டவர்களுமான இளைஞர்களுக்குக் குருப்பட்டமளித்தலும் நான்கு தேவைப்பாடுகளை அவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தலும்;

(ஔ) குருமடங்களையும் கானக ஆச்சிரமங்களையும் தாபித்தலும் தியானத்திற்கு அவசியமான வசதிகளை வழங்கலும் ;

(க) வலதுகுறைந்தவர்களுக்கு நலன்புரி வசதிகளை வழங்கல்;

(ங) எல்லாச் சமூகத்தினரிடையேயும் சமய, இன, சமூக ஒற்றுமையை மேம்படுத்தல் ;

(ச) இலங்கைக்குள்ளும் வெளியேயும் உள்ள வேறு பௌத்த ஒழுங்கமைப்புக்களுடன் சிநேக உறவைப் பேணல்;

(ஞ) இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு இயலச் செய்வதற்கு அவசியமானவாறான அடிப்படைத் திறமைகளை வழங்கல் ;

(ட) நோயுற்ற குருமாருக்கான வைத்தியசாலையொன்றைத் திறத்தலும் துறவி வாழ்க்கையை நடாத்துகின்ற எல்லா குருமாருக்கும் மருத்துவ வசதிகளை ஏற்பாடு செய்தலும்;

(ண) சமாதான விருப்புடைய கற்கைக் குழுக்களுக்கும், தியான குழுக்களுக்கும், பொதுசன தொடர்புக் குழுக்களுக்கும், செயற் குழுக்களுக்கும் ஆன ஆவணப்படுத்துகை நிலையமொன்றாகப் பணியாற்றுதலும் அத்துடன் தகவல் பரிமாற்றத்துக்கும் அனுபவ பகிர்ந்தளிப்புக்கும் ஏற்பாடு செய்தலும்;

(த) சமகாலச் சமுதாயத்திற்கு இயைபான கல்விக் கோட்பாடொன்றை விருத்தியாக்கும் நோக்கத்துக்காக சமய தத்துவங்களினதும் பௌத்த தத்துவங்களினதும் அத்துடன் கல்வியின் வேறு நவீன தத்துவங்களினதும் ஒப்பீடு சார்ந்த கல்வியை மேற்கொள்ளுதல்;

(ந) உலக சமாதானத்தை மேம்படுத்துவதற்கு பௌத்த சம்மேளனத்துடனும், வேறு சமயச் சார்புள்ள அத்துடன் மதச் சார்பற்ற சருவதேச ஒழுங்கமைப்புக்களுடனும், அவை அரசாங்க ஒழுங்கமைப்புக்களாக இருந்தாலும் சரி, அரசாங்க சார்பற்ற ஒழுங்கமைப்புக்களாக இருந்தாலும் சரி உடனின்று உழைத்தல் ;

(ப) மேற்கூறப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அல்லது உசிதமான அல்லது இடைநேர்விளைவான வேறு எல்லாக் காரியங்களையும் கருமங்களையும் செய்தல்.

4. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனமானது அதன் குறிக்கோள்களைக் கொண்டுநடாத்துவதற்காக. வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணம் கடன் வாங்கவும் அல்லது பணத்தைத் திரட்டவும் மானியக்கொடைகளையும் நன்கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும் அதன் நிதிகளை முதலீடு செய்யவும் தேவையான அலுவலரையும் சேவையாளரையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்துதல், வேலைநீக்கஞ் செய்தல் ஆகியவற்றுக்கான தத்துவங்களுட்பட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவைகளுள் ஏதேனும் ஒன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு எத்தன்மைத்தாயும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கும், நிறைவேற்றுவதற்கும் அத்துடன் புரிவதற்குமான தத்துவத்தை உடையதாதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைய, பணிப்பாளர் தலைமையதிபதி, உப தலைவர்கள், கௌரவ செயலாளர், உப செயலாளர், கௌரவ பொருளாளர் மற்றும் அவ்விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கிணங்கத் தெரிவு செய்யப்படக்கூடியவர்களுமான ஆறு பேருக்குக் குறையாத வேறு உறுப்பினர்களைக் கொண்ட முகாமைக் குழுவொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

3—ட 022610— (92/04)

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் உள்ளது எதற்கும் முரணானது எப்படியிருப்பினும் எல்பிட்டிய விகாரமகாதேவி விகாராதிபதி வெலிவிற்றியே சீவலி தேரர் தாபனத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியாக இருத்தல் வேண்டுமென்பதுடன், அவர் முன்னதாக இளைப்பாறினாலன்றி, சீவிய காலம் பணிப்பாளர் தலைமையதிபதியாக இருத்தலும் வேண்டும். அத்துடன் அவருக்குப் பின் அடுத்துறும் ஒருவரை நியமித்தலும் வேண்டும். இவர் முன்னதாக இளைப்பாறினாலன்றி, சீவியகாலம் முழுவதும் பதவி வகித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக் குழு, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிப்பவர்களும்; அத்துடன் அவர்களின் பெயர்கள் இச்சட்டத்துக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவர்களுமான சபாவின் முகாமைக் குழுவின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) ஏதேனும் பொதுக் கூட்டத்திலும், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளையாக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தல்; உறுப்பினர்களைச் சேர்த்தலும், மீளப்பெறுதலும், விலக்குதலும் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்களின் பதவி விலகல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களின் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும் ;

(இ) முகாமைக் குழுவின் உறுப்பினர்களைத் தெரிவு செய்தலும், அதன் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும், பணிகளும் ;

(உ) கூட்டுத்தாபனத்தினதும், முகாமைக் குழுவினதும் கூட்டங்களில் அவதானிக்கப்படவேண்டிய நடவடிக்கை முறையும், அக்கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் அத்தகைய கூட்டங்கள் பற்றிய நேரங்கள், இடங்கள், அறிவித்தல்களும், நிகழ்ச்சி நிரலும், அவற்றின் கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தின் நிருவாகமும், முகாமையும், அதன் நிதியங்களைக் கட்டுக்காப்பில் வைத்திருத்தல், அதன் கணக்குகளைப் பேணுதலும் கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவில் கூட்டுத்தாபன அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் விதி எதுவும் அதே போன்ற ஒரு கூட்டத்திலும் அதே முறையிலும், (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒரு விதியைப் போன்று திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம்.

(3) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலுள்ள சபாவின் விதிகள், இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இயைபாயிராத வரையில் இப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

சபாவினால் செலுத்தப்படற்பாலனவும், சபாவிற்கு செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்.

7. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்றதான சபாவின் எல்லாக் கடன்களும், பொறுப்புகளும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அந்நாளன்று சபாவிற்கு வருமதியான எல்லாக் கடன்களும், அல்லது செலுத்தப்படற்பாலதான ஒப்பப்பணங்களும், உதவு தொகைகளும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

8. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன் முகாமைக் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம். இலச்சினையானது முகாமைக் குழுவின் அனுமதியுடனன்றியும் முகாமைக் குழுவின் இரு உறுப்பினர்களது முன்னிலையிலுமன்றி எத்தன்மைத்தான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமூகமளித்ததற்கு அடையாளமாக சாதனத்தில் கையொப்பமிடல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்று தனிவேறானதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

9. கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறு வகையாக கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும் சட்டத்தில் இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் அவற்றை விற்க ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.

10. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்கள் மூலம், அவர்களில் இருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும், பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

11. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அட்டவணை [பிரிவு 5(2)]

பணிப்பாளர் தலைமைபதிபதி :— எல்பிட்டிய விகாரமகாதேவி விகாராதிபதி வெலிவிற்றியே சீவலீ தேரர்.

உப தலைவர்கள்:—(1) திரு. பி. கே. தர்மசேன
(2) திரு. எட்மன் காரியவசம்

கௌரவ செயலாளர் :—திரு. சுமித்ரபால காரியவசம்

உதவிச் செயலாளர் :—திரு. என். கே. சந்திரதாச

கௌரவ பொருளாளர் :—டாக்டர் கே. பீ. வங்சபால

ஏனைய உறுப்பினர்கள்:

(1) திரு. ஏ. பி. சோமபால
(2) திரு. ஈ. பி. குணவர்தன
(3) திரு. சலமன் கமகே
(4) திரு. கே. ஏபா
(5) திரு. ஏ. கே. சிறிசேன
(6) திரு. ஆனந்த ஜயதேவ
(7) திரு. ஸ்ரீயாநந்த காரியவசம்
(8) திரு. எம். ஜீ. மகதுன் முதலாலி
(9) திருமதி ஓ. கே. ஆரியவதி
(10) திருமதி பீ. ஜீ. ஈ. காரியவசம்

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,859 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.